# TAMIL

*Maximum Marks: 80*
*Time Allowed: Three Hours*
*(Candidates are allowed **additional 15 minutes** for **only** reading the paper. They must **NOT** start writing during this time).*

*Answer **Questions 1, 2 and 3 in Section A and four** questions from **Section B** on **any three** out of the four prescribed textbooks.*
*The intended marks for questions or parts of questions are given in brackets [ ].*

## SECTION A

## LANGUAGE - 40 MARKS

**Question 1** **[15]**

**Write a composition in approximately 400 words in Tamil on *any one* of the topics given below.**

**கீழ்க்கண்டவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு 400 வார்த்தைகளில் ஒரு கட்டுரை தமிழில் எழுதுக.**

(i) "அறிவியலின் அதிசயம்" - என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.

(ii) "தற்காலத்தில் காகிதப் புத்தகங்களை விட மின்புத்தகங்கள் (Digital books)சிறந்தது" - இக்கருத்தை ஏற்று அல்லது எதிர்த்து ஒரு கட்டுரை எழுதுக.

(iii) இயற்கையைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம், வழிமுறைகள் மற்றும் நன்மைகள், இயற்கையை அழிப்பதனால் உண்டாகும் தீமைகள் இவற்றை விளக்கி ஒரு கட்டுரை வரைக.

(iv) "நமது ஆரோக்கியம் நமது சுற்றுப்புறச் சூழ்நிலையால் நிர்ணயிக்கப் படுகிறது" — உனது கருத்துகள் கட்டுரையாக விரியட்டும்.

(v) ' சந்திரயான் 3 ' இந்தியாவின் முக்கிய சாதனை – கருத்துக்கள் கட்டுரையாக விரியட்டும்.

**This Paper consists of 10 printed pages.**


*© Copyright reserved.*

(vi) கீழ் வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றுக்கு மூலச் சிறுகதையை எழுதுக:

(a) "நான் மாடியில்  எனக்காக கொடுக்கப்பட்ட அறைக்குப் போன போது ........."எனத் துவங்கும் ஒரு சிறுகதையை எழுதுக.

(b) "........என் முயற்சிக்குக் கிடைத்த வெற்றி இது என்பதைப் புரிந்து கொண்டேன்" என முடியும் ஒரு சிறுகதையை எழுதுக.

**Question 2**

**Read the passage given below carefully and answer the questions that follow, using your own words in Tamil.**

**பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துணர்ந்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி:**

சங்க நாளில் வாழ்ந்திருந்த புலவர் பெருமக்களுள் கணியன் பூங்குன்றனார் என்பாரும் ஒருவர். 'கணியன்' என்பது இவர் சோதிடம் வல்லார் என்பதுணர்த்தும். பூங்குன்றம் என்பது இவர் உதித்த ஊர். 'ஆர்' என்பது சிறப்பு விகுதியாகும். இப்புலவர் பெருந்தகை, தாம் பெற்ற புலமைச் செல்வத்தை மாந்தர்க்கு நல்லறிவு ஊட்டும் பொதுநலப் பணியில் பயன்படுத்தி வந்தவராவார். பரந்த நோக்கும் விரிந்த உள்ளமும் உடைய இவர் நடுநிலை பிறழாத வாழ்வு வாழ்ந்து, அந்நெறியினை மக்கள் அனைவருமே கடைப்பிடித்து ஒழுகவேண்டும் என்ற ஆர்வமுடைய பெரிய அறிஞராக விளங்கினார். அரசர் முதலாக அனைவரும் ஏற்று ஒழுகத்தக்க அருள் நிரம்பிய அறவாழ்வினை எடுத்துரைத்த அருளாளர் இவர்.

எங்கும் அமைதியும் அருளும் குடிகொள்ள வேண்டும் என்ற ஆவல் கொண்டவர் இப்புலவர்.இந்த ஆவல் நிறைவேறுவதற்கு அடிப்படையாவது மெய்யுணர்வு என்று உணர்ந்திருந்தார். மெய்யுணர்வாவது உலக வாழ்வின் உண்மைகளை உணர்தல் ஆகும்.மக்கள் அறிவால் உயர்ந்தாலன்றி மெய்யுணர்வு தோன்றாது.மெய்யுணர்வு உண்டானாலன்றி அருளுள்ளம் அமையாது. உள்ளத்தில் அருள் பெருகியிருந்தாலன்றி அமைதியும் இன்பமும் தோன்றமாட்டா. இவையனைத்தையும் விளக்கி இவர் அருளிய புறப்பாடல் ஒன்றுண்டு.அப்பாடலில் பொதிந்துள்ள ஒவ்வொரு கருத்தும் எக்காலத்திற்கும் எந்நாட்டவர்க்கும் பொருந்தும்.

"யாதும் ஊரே; யாரும் கேளிர்" என்று தொடங்கும் பாடலே அஃதாம். யாதுமூரே யாவருங்கேளிர் என்பதே மெய்யுணர்வு தோன்றுதற்கு அடிப்படையாம்.ஒருவனுக்கு எந்த ஊரும் தன்னூராகவும் எந்த ஊரில் வாழ்வாரும் தன் கேளிராகவும் ஆகுமாயின் வேற்றுமை உணர்வுக்கு இடமேது? உண்மை அறிவு உடையோர்க்கு இம்மெய்யுணர்வு உடன் கிட்டும். அப்புறப்பாடலில் அடுத்த அடி 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்பதாம். மெய்யுணர்வு பெற்றவன் தீமையும் நன்மையும் தத்தம் ஊழ்வினையால் ஊட்டப்பெற்றவை.பிறரால் செய்யப் பட்டவையல்ல என்று உணர்வான்.இப்பாடல் தமிழனின் ஒருலகக் கொள்கையை உணர்த்துவதால் அனைத்து நாட்டு அறிஞர் உள்ளத்தே என்றென்றும் நீக்கமற நிறைந்துள்ளது.

கேள்விகள்:

(i) மெய்யுணர்வு குறித்துப் புலவர் கூறுவது யாது? [3]

(ii) பூங்குன்றனாரின் உயர் பண்புகள் யாவை? [3]

(iii) இப்பகுதியில் கூறப்பட்டுள்ள புலவர் யார்?அவர் எழுதிய புறப்பாடலின் முதல் மற்றும் இரண்டாம் அடிகளை எழுதுக [3]

(iv) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(a) பூங்குன்றனார் என்பதில் 'ஆர்' என்பது சிறப்பு ____________ ஆகும். [1]

(1) பகுதி

(2) விகுதி

(3) சந்தி

(4) இடைநிலை

(b) அருள் நிரம்பிய ____________ எடுத்துரைத்த அருளாளர் பூங்குன்றனார். [1]

(1) அறவாழ்வினை

(2) புறவாழ்வினை

(3) அகவாழ்வினை

(4) இகவாழ்வினை

(c) மக்கள் அறிவால் உயர்ந்தாலன்றி ____________ தோன்றாது. [1]

(1) கலையுணர்வு

(2) இறையுணர்வு

(3) மெய்யுணர்வு

(4) அருளுணர்வு

(v) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.

(a) இப்புலவர் அருளிய கருத்து எக்காலத்தவர்க்கும் ____________ பொருந்தும். [1]

(1) எம்மதத்தவர்க்கும்

(2) எம்மொழியார்க்கும்

(3) எந்நாட்டவர்க்கும்

(4) எம்மொழியார்க்கும்

(b) தீதும் நன்றும் தத்தம் ____________ ஊட்டப்பெற்றவை. [1]

(1) ஊழ்வினையால்

(2) நல்வினையால்

(3) தீவினையால்

(4) இருவினையால்

(c) இப்புறப்பாடல் தமிழனின் ____________ கொள்கையை உணர்த்துகிறது. [1]

(1) ஒருலகக்

(2) ஈருலகக்

(3) புறவுலகக்

(4) மூவுலகக்

**Question 3**

**(A) Correct the following sentences and rewrite as per the instructions given.**

**கீழ்க்கண்ட வாக்கியங்களில் பிழை நீக்கி கூறியபடி எழுதுக.**

பொதுத் தமிழ்:

(i) பறவைகள் குளிர் மிகுதியாக இருந்ததால் வேறு நாட்டிற்கு இடம் பெயர்ந்தது. [1]

(ii) எனக்கு நேற்று வகுப்பு இருக்கும் [1]

(iii) பிழை நீக்கிய வாக்கியத்தை எடுத்து எழுதுக: [1]

(a) எல்லா மொழிகளுக்கும் அடிப்படை ஒன்றே.

(b) எல்லா மொலிகழுக்கும் அடிப்படை ஒண்ரே.

(c) எள்ளா மொழிகளுக்கும் அடிப்படை ஒன்றே.

(d) எல்லா மொளிகலுக்கும் அடிப்படை ஒண்றே.

(iv) சரியான வாக்கியத்தை தேர்ந்தெடுத்து எழுதுக: [1]

(a) ஓடும் தன்னீர் தெளிவாய் இருந்தது.

(b) ஓடும் தந்நீர் தெளிவாய் இருன்தது.

(c) ஓடும் தண்ணீர் தெளிவாய் இருந்தது.

(d) ஓடும் தண்ணீர் தெலிவாய் இருன்தது.

(v) சரியான வாக்கியத்தை தேர்ந்தெடுத்து எழுதுக: [1]

(a) கவிதையிண் இயள்பு எளிமையாகும்.

(b) கவிதையின் இயல்பு எளிமையாகும்.

(c) கவிதையின் இயழ்பு எளிமையகும்.

(d) கவிதையின் இயள்பு எலிமையாகும்.

(B) **Use the idioms in the sentence as per the instructions given.**

**வாக்கியத்தில் அமைத்து எழுதுக.**

(i) ஆணித் தரமாக [1]

(ii) கள்ளமின்றி [1]

சரியான மரபுச் சொல்லை தேர்ந்தெடுத்து நிரப்புக:

(iii) சுதந்திர தினத்தன்று வீரர்கள் ____________ நடந்து சென்றனர். [1]

(a) போற்றிப் புகழ்ந்து

(b) அணி அணியாக

(c) தோள் கொடுத்து

(d) ஊணுறக்கமின்றி

(iv) அவன் தனக்குக் கொடுத்த வேலையை ____________ செய்து முடித்தான். [1]

(a) கண்ணும் கருத்துமாய்ச்

(b) உள்ளும் புறமுமாகச்

(c) கையும் களவுமாகச்

(d) தொன்று தொட்டுச்

(v) கந்தன் வீட்டுப் பாடம் செய்யாததால் தன் ஆசிரியரிடம் ____________ கூறினான். [1]

(a) ஐயமின்றி

(b) நாடொறும்

(c) நன்னெறி

(d) நொண்டிச் சாக்கு

## SECTION B
## LITERATURE - 40 MARKS

*Answer **four** questions from this section on **any three** out of the four prescribed textbooks.*

பின்வரும் வினாக்களுள் ஏதேனும் நான்கனுக்கு உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மூன்று பாடப் புத்தகங்களிலிருந்து விடையளி

### பொதுத் தமிழ் (PODHU TAMIL)

**Question 4**

"தீதறு நல்லுரை கேளா தொழிவேனேல் நோதக்க செய்தாள் என்று எள்ளல் இது ஒன்று ........"

(i) கதிரவன் கண்ணகியிடம் கோவலனைப் பற்றி என்ன கூறினான்? **[1]**

(ii) கோவலனைக் கண்ட பொழுது நிகழ்ந்த அற்புதம் யாது? **[2]**

(iii) சூரியன் மலையின்கண் மறைந்ததன் காரணமாக ஆசிரியர் தரும் விளக்கம் யாது? **[2]**

(iv) 'உண்டுகொல்' எனும் முறையில் கண்ணகி சினந்து கூறியன யாவை? **[5]**

**Question 5** **[10]**

'பொறையுடைமை' எனும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறியவற்றை தொகுத்து எழுதுக.

**Question 6** **[10]**

சிக்கனம் என்னும் தலைப்பில் கவிஞர் சுரதா கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

## கதைக் கோவை (KADHAI KOVAI)

**Question 7**

“பால்வண்ணம் பிள்ளை ஆபிஸில் பசு. வீட்டிலோ ஹிட்லர்.அன்று ஆபீஸிலிருந்து வரும் பொழுது ஹிட்லரின் மீசை அவருக்கு இல்லாவிட்டாலும் உதடுகள் துடித்தன ”

(i) பால்வண்ணம் பிள்ளையின் மனைவி எதனை விற்று மாடு வாங்கினாள்? [1]

(ii) பால்வண்ணம் பிள்ளை மாட்டை யாருக்கு என்ன விலைக்கு விற்றார்? அதனை வாங்கிய விலை என்ன? [2]

(iii) பால்வண்ணம் பிள்ளை ஆபீசில் மெக்ஸிகோ எங்கு இருப்பதாக கூறினார்? உண்மையில் அது எங்கு இருக்கிறது? [2]

(iv) பால்வண்ணம் பிள்ளையின் பிடிவாத குணத்தை ஏதேனும் மூன்று எடுத்துக் காட்டுகளுடன் விளக்குக. [5]

**Question 8** [10]

வேலி – இக்கதையை பொருளும் சுவையும் குன்றாது சுருக்கி வரைக.

**Question 9** [10]

ஒவ்வொரு கல்லாய் – இச்சிறு கதையில் வரும் கதை மாந்தர் பற்றித் திறனாய்வு செய்க.

## சினேகிதி (SINEKITHI)

**Question 10**

"ஆமாம்; போடா வெளியே ! அத்தையைக் கூப்பிடட்டுமா?"

அவன் மீண்டும் வெறியோடு சிரித்தான்.

(i) மாடிப்படிகளில் துரை நின்று கொண்டிருந்தபோது லலிதா யாரிடம் பேசிக் கொண்டிருந்தாள்? அவள் குரல் எப்படி ஒலித்தது? **[1]**

(ii) "உடலின் தேவை இல்லாமல் உள்ளுணர்வால் மட்டிலும் மனிதர் வாழ முடியுமா?" – கேட்டது யார்? இதற்கு துரையின் பதில் என்ன? **[2]**

(iii) "உங்களை மீண்டும் சந்திக்காவிட்டால் ...." என்று கேட்ட துரையிடம் லலிதா கூறிய பதில் என்ன? **[2]**

(iv) பம்பாய் போகப் போவதாகக் கூறிய துரையிடம் லலிதா எங்கு போவதாகக் கூறினாள்? இதில் நாராயணசாமி செய்த திருத்தத்தையும் அதன் பின் அவர் கூறிய செய்திகளையும் தொகுத்து எழுதுக. **[5]**

**Question 11** **[10]**

"அகிலனின் கலைத் தொண்டே 'சிநேகிதி' என்னும் புதினம்" இக்கூற்றை நிறுவுக.

**Question 12** **[10]**

துரையின் பாத்திரப் படைப்பு இப்புதினத்திற்கு எவ்வாறு வலுவூட்டுகிறது

## யான் கண்ட இலங்கை (YON CANDA ELANGI)

**Question 13**

"மோட்டார் பயணத்தைச் சிறிது நேரம் மாற்றினாற் போல் இருப்பதற்காக வழியில் ஒரு ரப்பர்த் தொழிற்சாலைக்குள் புகுந்தோம் "

(i) ரப்பர்த் தொழிற்சாலைக்குள் நுழைந்த போது மு.வ. வின் நினைவுக்கு வந்த பாடல் எது? யார் எழுதியது? [1]

(ii) திரிகோண மலை — பெயர்க் காரணம் தருக. [2]

(iii) இராவணன் வெட்டு — சிறு குறிப்பு தருக. [2]

(iv) ரப்பர் தயார் செய்யும் விதத்தை சுருக்கி எழுதுக. [5]

**Question 14** [10]

கன்னியா வெந்நீர் ஊற்றுகளைப் பற்றி விவரித்து எழுதுக.

**Question 15** [10]

இலங்கையில் மலைச்சரிவுகளில் நெல் பயிரிடுவதைப் பற்றி மு.வ.கூறியுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.